83

**கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம், அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ)–ன் செயல்முறைகள்**

---

**பிறப்பிப்பவர் திரு.பா.பெ. கோவிந்தராசு, எம்.சு.,**
**முதல்வர் (மு.கூ.பொ.).**

---

**செயல்முறை ஆணை எண். 1070/ஏ–1/2023,** **நாள் 20.07.2023**

**பொருள்** நிர்வாகம் – அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – இப்பயிலகத்தில் உள்ள அரசு பொருட்கள் மற்றும் இதர பொருட்களை சேதப்படுத்தாமல் தடுக்கும் பொருட்டு தளம் வாரியாக பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்து ஆணை வழங்கியது – திருத்திய ஆணை வழங்குதல் – தொடர்பாக

**பார்வை** 1 திரு.மு.சதீஸ்குமார், விரிவுரையாளர் (கணிதம்) மற்றும் வளாக அலுவலரின் 06.04.2023 நாளிட்ட கடிதம்.

2 இப்பயிலக முதல்வரின் செயல்முறை ஆணை எண்.1070/ஏ–1/2023, நாள் 17.07.2023

---

பார்வை 1–ல் காணும் கடிதத்தின்படி, இப்பயிலகத்தில் பயிலும் மாணவர்களில் சிலர் பயிலக குடிநீர் குழாய்கள், கழிப்பறைகள், கழிவுநீர் குழாய்கள் மற்றும் இப்பயிலகத்தில் உள்ள அரசு பொருட்கள், ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் வாகனங்களை சேதப்படுத்துகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, அதனை கண்காணிக்கும் பொருட்டு பார்வை 2–ல் காணும் கடிதம் மூலம் தளம் வாரியாக பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது அவ்வாணையில் பின்வருமாறு மாற்றம் செய்து இதன் மூலம் திருத்திய ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் (1) | பெயர் திருவாளர்கள் (2) | பதவி (3) | தளம் (4) |
|---|---|---|---|
| 1. | மா.பிரகாஷ் | விரிவுரையாளர் / அமைப்பியல் | தரைதளம் |
| 2. | ம.சிவசங்கரி | விரிவுரையாளர் / மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் | |
| 3. | வே.சிவன் | விரிவுரையாளர் / வேதியியல் | |
| 4. | க.குருசாமி | விரிவுரையாளர் / அமைப்பியல் | முதல்தளம் |
| 5. | தி.ராஜ்குமார் | விரிவுரையாளர் / இயந்திரவியல் | |
| 6. | த.சுபா | விரிவுரையாளர் / கணிப்பொறியியல் | |

..2..

| வ.எண் (1) | பெயர் திருவாளர்கள் (2) | பதவி (3) | தளம் (4) |
|---|---|---|---|
| 7. | கோ.தீலிப்குமார் | விரிவுரையாளர் / மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் | இரண்டாம் தளம் |
| 8. | ஆ.ராஜேஷ் | விரிவுரையாளர் / மின்னியல் மற்றும் மின்னணுவியல் | |
| 9. | ந.பா.சுஸ்மிதா ஜெய்ஸ்ரீ | விரிவுரையாளர் / கணிப்பொறியியல் | |
| 10. | ந.அர்விந்த் | விரிவுரையாளர் / இயற்பியல் | மூன்றாம் தளம் |
| 11. | முனைவர்.கா.முருகன் | விரிவுரையாளர் / வேதியியல் | |
| 12. | முனைவர்.க.சித்ரா | விரிவுரையாளர் / வேதியியல் | |
| 13. | சு.சுரேஷ் | விரிவுரையாளர் / ஆங்கிலம் | |
| 14. | சி.ஆறுமுகம் | முதலாள் போதகர் | பணிமனை |
| 15. | ஆ.பிலவேந்திரராஜ் | பணிமனை போதகர் | |

மேற்படி பொறுப்பு அலுவலர்கள் அவ்வப்போது தளத்தினை பார்வையிட்டு அந்தந்த தளத்தில் ஏதேனும் அரசு சொத்துக்களை சேதப்படுத்தும் நேர்வில், சேதப்படுத்தப்பட்ட பொருட்களின் விவரங்களை புகைப்படத்துடன் முதல்வரின் கவனத்திற்கு கொண்டு வரும்படியும், சேதப்படுத்திய நபரை அடையாளம் கண்டுபிடித்து சேதப்படுத்திய பொருட்களுக்கான முழு தொகையையும் வசூலித்து அரசு சொத்துகளை சீர் செய்யும்படியும் / சேதப்படுத்திய நபரை அடையாளம் காண இயலாத பட்சத்தில் தளம் முழுவதில் உள்ள மாணவர்களிடமிருந்து முழு தொகையையும் வசூலித்து அரசு சொத்துகளை சீர் செய்யும்படியும் இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இவ்வாணை உடனடியாக அமலுக்கு வருகிறது.**

ஒம்/—பா.பெ.கோவிந்தராசு
முதல்வர் (மு.கூ.பொ.)

பெறுநர்

மேற்கண்ட ஆசிரியர்கள் ) துறைத்தலைவர் மூலமாக
நகல் முதல்வரின் மேஜைக்கு
நகல் துணைமுதல்வர்
நகல் அனைத்து துறைத்தலைவர் ( பொ) ) பயிலக வாட்ஸ்அப் குழு மூலம்
நகல் முதல்வரின் நேர்முக உதவியாளர்
நகல் பொருளாளர்
நகல் கண்காணிப்பாளர் ( நிர்வாகம் / கணக்குகள் )
நகல் உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/7/23
கண்காணிப்பாளர்
21/7/23